சார்பு நீதிமன்றம், கீரனூர்

அ.வ.எண். 80/2021

Deposition of witness of Defendant – D.W.1 (அஞ்சம்மாள்)

21.01.2026

பிரதிவாதி தரப்பு 1 வது சாட்சி அஞ்சம்மாள் என்பவரிடம் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.வினோத், உதவியாளர் என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

7 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:

1. தாவா சொத்துக்கள் முருகன் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் யாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என கட்சி செய்கிறேன் என்றால் 3 ஆம் பிரதிவாதி ரெங்கன் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என கட்சி செய்கிறேன்.
2. தாவா சொத்தில் என்ன உரிமைக் கோரி கட்சி செய்கிறேன் என்றால் கணபதி என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கியுள்ளேன். அவ்வாறு கணபதியிடம் கிரையம் வாங்கியபோது அவர் பெயரில் பட்டா இருந்தது என்றால் சரிதான். தற்போது எனது பெயருக்கு பட்டா மாற்றிவிட்டேன்.
3. மேற்படி கணபதியிடம் இருந்து வேறு நபர்களும் சொத்துக்கள் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு கிரையம் வாங்கிய நபர்கள் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டு அவர்களது தனிப்பட்ட அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.
4. கணபதியிடம் இருந்து 7 ஆம் பிரதிவாதி ராதிகா சொத்து கிரையம் வாங்கி அவர் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரிதான்.

8 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:

1. நான் கணபதியிடம் சொத்து வாங்கும்போது வில்லங்கம் பார்த்து வாங்கினேன் என்றால் சரிதான். அவ்வாறு கிரையம் வாங்கும்போது அந்த சொத்து பூர்வீக சொத்தா, கூட்டு சொத்தா அல்லது கணபதியின் தனிப்பட்ட சொத்தா என கேட்டு தெரிந்து தான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான்.
2. தாவா சொத்தை பொறுத்து கூட்டுஉரிமையாளர்கள் உள்ளார்களா என கேட்டு தெரிந்து தான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். நான் தாவா சொத்தை கிரையம் வாங்கும்போது பட்டா 1 ஆம் பிரதிவாதி கணபதி பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான்.
3. கணபதியின் உடன்பிறந்த சகோதரர் உலகநாதன் என்பவர் இறந்துவிட்ட விவரம் என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. கணபதியின் உடன்பிறந்த சகோதரர் உலகநாதனின் வாரிசுகள் தான் வாதிகள் என சொல்லி பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் நான் கிரையம் வாங்கும்போது அவரது தனிப்பட்ட சொத்து என்று சொல்லி தான் கிரையம் கொடுத்தார்.
4. வழக்கிற்காக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

S/d – C. Rajesh, B.A.B.L.,
சார்பு நீதிபதி, கீரனூர்.